உ

சிவமயம்

# உள்ளம் குடிகொள்ளும்

# ஓங்கார மூர்த்தி



உரைப்பவர்: மல்லை: நம. சிவப்பிரகாசம்

குரோதன ஆடிச்சதுர்த்தி

**திருமதி சிவப்பிரகாசம் ஞானலக்குமி**

திருவடிசேர்ந்து ஓராண்டு

௨

யாழ் இந்துக்கல்லூரி தேவார
நூற்றாண்டுவிழாச் சிற
நினைவாக

பழைய மாணாக்கர் (1919)
மல்லாகம் நம. இளையதம்பிநாசு
(கிறாமா)
(85)

அன்பளிப்பு.

# உள்ளம் குடிகொள்ளும்

# ஓங்கார மூர்த்தி



உரைப்பவர்! மல்லை: நம: சிவப்பிரகரசம்

குரோதன ஆடிச்சதுர்த்தி

**திருமதி சிவப்பிரகாசம் ஞானலக்குமி**

திருவடிசேர்ந்து ஓராண்டு

மல்லாகம்:

## இவ்வுரை எழுந்தவாறு.

உண்மையை ஓங்கவைக்கும் ஓங்காரத்துட் பொருளாம் பிரணவப் பெருப்பேறு, எங்கள் குலதெய்வம். காலையும் மாலையும் கணபதிக் கடவுளின் காட்சியே வாழ்க்கைக் கைங்கரியம் என்று எண்ணவைக்கும் ஓங்காரமூர்த்தி, உள்ளம் குடிகொண்ட உவகையை, எங்கே, எப்பொழுது, எடுத்துரைக்கலாம் என்றிருந்தது எம் எண்ணம். ஏற்ற ஒரு நிமித்தம் இப்பொழுதெழுந்துள்ளது.

எம் வாழ்க்கைத்துணை இரத்தாக்ஷி ஆண்டு, ஆடித்திங்கள் பூரம், சதுர்த்தி, செவ்வாய்க்கிழமை, இறைவனடி எய்திய நாள். பழம் பிள்ளையார் கோயிலிலே சதுர்த்தி அபிடேக மணியோசை கிண்கிணியாகக் கேட்கும் வேளையிலேயே அன்னாரின் ஆன்மா அப்பால் ஏகியது. எங்கள் இல்லம் ஏரம்பன் தொண்டில் இயைந்த வகையில் இல்லத்தரசியின் எண்ணமாக ஓராண்டுத் திதி வேளையில் இந்த உரை சிந்தனையில் எழுந்தது

எனவே பழம்பதிப் பிள்ளையாருக்கு இவ்வுரை, எம் இல்லத்தரசியின் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுகின்றது. *

நம. சிவப்பிரகாசம்

* இல்லறத்தில் ஏகுநாள், நாம் இருவரும் யோக சுவாமிகளின் ஆசியைப் பெறச் சென்றதும், தபோதனர் எம்மைச் சிவபுராணம், விநாயகர் அகவற் பாராயணம் பண்ணவைத்து நித்திய வழிபாட்டில் இத்தோத்திரத்தின் இடத்தை எமக்கு மீண்டும் ஞாபகப்படுத்தியமை இன்று ஞாபகமாகின்றது.

உ

சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி,

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை.

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடுமின் தேடிச் சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொண்மினே''

மல்லாகம் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி உள்ள பழம் பிள்ளையார் ஒரு கற்பகதரு; அதுவுமன்றி அவர் ஒரு ஞானப்பழம். சான்றோர்களையும், சாதுக்களையும் பக்தர்களையும் அரவணைத்து அகில உலகுக்கும் வழங்கியவர் இந்தப் பிள்ளையார். குன்றாப் புகழும், மங்காத செல்வமும் செந்தமிழ்ப் பற்றும், சிவ சமய ஆசாரமும் மிக்க நமசிவாயப் புலவர் குடும்பம் ஒரு பண்பாட்டுக் குடும்பமாகும்; இக் குடும்பத்தில் அவதரித்த பெரியார் திரு. நம. சிவப்பிரகாசமும் மனையாள் ஞானலட்சுமியும் கொழும்புத்துறை முனிவரின் நல்லாசி பெற்றவர்கள்; பசித்து வந்தோருக்கு வயிறார உணவு கொடுத்து ஆதரித்தவர்கள்; இரப்போர்க்கு இல்லையென்றது ஈபவர்கள்; புகழ்பூத்த இக் குடும்பத் தலைவர் தனது அன்பும் ஆற்றலுங் கொண்ட இல்லறத் துணைவியை நினைவு கூர்ந்து இந் நூலை மல்லாகம் பழம் பிள்ளையாருக்கு அர்ப்பணிக்கின்றார்;

ஓங்கார வடிவினனாக விளங்கும் விநாயகப் பெருமானின் அற்புதமான தத்துவங்களை அழகாக உர்த்ணதுவது பாராட்டத் தக்கது; ஓங்காரப் பிரணவ நாதமே பரம் பொருளின் முதற் படைப்பாகும். ஆதி எழுத்தும் அதுவே; அவ் வெழுத்தின் பொருள் அம்மை அப்பராக விளங்கும் சிவ பரம்பொருளேயாம். உலகைச் சுற்றி வந்து மாங்கனி பெறவேண்டிய விநாயகர், அம்மை அப்பனை வலம் வந்து கனி பெற்றமை இவ் வுண்மையைக் காட்டுவதாகும். பிரணவம் என்ற சொல்லுக்குப் பொருள் உயிர்களால் துதிக்கப்படுவது என்பதாகும். இது பரம் பொருளுக்குப் பீடயாகும், தாரகம், ஏகாட்சரம், ஓங்காரம், ஓம் மந்திரார்த்தம், மந்திர மூலம், மந்திர நாயகம், வெட்டாத சக்கரம், குடிலை என்பன இதன் மறு நாமங்களாகும், இவ் உண்மைகளை உள்ளடக்கி சைவ சித்தாந்த சாத்திரத்தை இணைத்து திருமுறைகளை ஆதாரங் காட்டி இந்நூலை யாத்துள்ளார் ஆசிரியர்; இது ஒரு ஞானப்பணி. தமது வாழ் நாளில் இத்தகைய பல பணிகளை யாற்றிய பெரியார் திரு; நம. சிவப்பிரகாசம் அவர்கள் யாத்த இந் நூல் விநாயக பக்தர்களின் திருக்கரங்களில் விளங்கி அவர்கள் திருவுள்ளங்களில் ஞான ஒளியை ஏற்றி வைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு;

வணக்கம்.

'துர்க்காபுரம்'
தெல்லிப்பழை,
5-8-85;

# உள்ளம் குடி கொள்ளும் ஓங்கார மூர்த்தி

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் அருள்மொழித் திருமந்திரம் செப்பிய திருமூலநாயனுர்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே-

என எடுத்து முதற்கண் ஏத்தியே அப்பெருநூலை அமைத்தனர். குஞ்சரக்கன்றினைக் கும்பிட்டபடி திருவருட்பயன் இகழ்த்திய உமாபதி சிவாசாரியர்,

நற்குஞ் சரக்கன்று நண்ணிற், கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

என்று எண்ணியதை இங்கு எண்ணுதிருக்க இயலுமா? கலைஞானத்தைக் கற்க வேண்டியதெற்றுக்கு? நிலையான பொருள் எதுவென ஆய்ந்து தலையாய முத்திநிலையையடைதற்பொருட்டே.

அதற்காகவே ஆக்கை எடுத்தோம் என்றனர், எங்கள் குரவர் ஆறுமுகநாவலர் அவர்கள்

அந்தக் கலைஞானத்தை அறிந்துகொள்வது எளிதானதொன்றன்று. ஆனுல், நல்ல குஞ்சரக் கன்றும் ஓங்காரத்தோனை உள்ளத்தில் ஓங்கவைத்தால், அரிதான பொருள் எளிதாக விளங்கும்.

நல்குஞ்சரக்கன்று – ஆனைமுகத்தன் – ஓங்காரவடிவினன் விநாயகன், விக்கினேஸ்வரன், கணபதி, கணேசன், கஜமுகன் ஆகுவாகனன், பிரணவன், பிள்ளையார், என்று அடியார்

களின் நாவில் ஆங்காங்கு நாமங்கள் அமைந்திருக்கக் காரணமாம், ஒவ்வொன்றும் ஒரு பொருத்தமான தத்துவக் கருத்துக்குரியது.

எந் நாமம் கொண்டாலும் எம்மூர்த்தமும் ஈசனே
யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வம் ஆகி
ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்

சிவஞானசித்தியார்

சிவனே விநாயகன்: விநாயகனே சிவன்
மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை
வி—நாயகன் (வி என்ற எழுத்து இல்லை என்ற பொருளில் எழுந்தது)

பரமபதி ஒருவரே. பிரணவப்பெரும் பொருள் அதுவே. சிவமே பதி என்ற நிலையை உணர உமாபதி சிவாசாரியர் தந்த சிவஞானசித்தியாரில் ஒரு வரைவிலக்கணம் உண்டு.

பலகலையா கமவேதம் யாவினும் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவுமரு வுருவன்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதா [கித்
திகழ்வதுதான் சிவமென்பர் தெரிந்து ளோரே

நுண்மையான இவ்விளக்கத்தை நோக்கும் ஆற்றல், உண்மையைத் தெளிந்தோர்க்கே உண்டு.

செப்பொருள் திகழ்த்தும் சிவஞானபோதக் கடவுள் வணக்கத்திலே சந்தாநுசாரியர் மெய்கண்டதேவர்,

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

என்ற வஞ்சித்துறைச் செய்யுளில், சிந்தை தெளியப் போந்த நந்தி பெருமானுக்குக் கைலையங்கிரியிற் கல் ஆல மாத்தின் கீழ் அருள்வடிவாகிச் சிவப்பரம்பொருள் சிவாகமப் பொருளைச் சிவஞான போத தத்துவ சாத்திர வடிவாகத் தெளிவுறச் செய்ததை எடுத்துரைத்து, அப்பொருளாம் முப்பொருளைத் தாம் செப்புதற்குப் பொல்லாப் (பொள்ளாப்) பிள்ளையாரின் இணைமலர் அடிவணக்கம் அமைத்தனர்: விக்கினம் தீர்க்கும் விநாயகரை வேண்டும் பொழுதும் அம் மூர்த்தத்தின் மூலம் ஆம் கைலையானை, மூன்றேன் முக்கண்ணனைத், தேவர் நினைவுகூருதல் காண்க.

திருவடி இருமலர் என்றும் அதில் ஒன்று (வலம்) முற்றறிவு ஆகவும், மற்றையது (இடம்) முற்றுத்தொழில் ஆகவும் மெய்கண்டதேவர் மெய்கண்டுரைத்தனர் என்க:

சிற்றறிவுள்ள ஆன்மா முற்றறிவுள்ள முதல்வனை நாடி அறிவுத்தேர்ச்சி அடைவது இயல்பே:

கச்சியப்பசிவாசாரியர் சிவமூர்த்தங்களுள் இன்னென்றாகிய கந்தக்கடவுளுக்குப் புராணம் கண்டபொழுது

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்.
என்று தொடங்கி

விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம் என இம் மரபினைக் கையாண்டனர்.

செம்முகம் ஐந்துளான் என்று சதாசிவமூர்த்தியின் தோற்றம் இங்கு திகழ நின்றமை நோக்கற்பாலது. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன இவ் ஐந்து திருமுகங்கள்.

மூலப் பொருள் சிவமே என்றுணர முற்றறிவாம் அப்பரப்பொருளையே சிற்றறிவாளர் தேடுவர்.

அருவம், உருவம், அருவுருவம் என்ற தன்மைகளில் அரனைக் கற்பனை செய்கின்றோம்

சிவன், அவன் ஞானம் கிரியை ஆம் சத்தியைப் பொருந்தும் தன்மை - அருவம். சிவம் – சத்தி – நாதம், விந்து சதாசிவமூர்த்தம் - அருவுருவம்

மகேசுரமூர்த்தம் - கிரியாசத்தி மேவி ஞானசத்தி அமையும் தன்மை - உருவம் - மகேசன், உருத்திரன், விட்டுணு, பிரமன்

நாம் வழிபட நயக்கும் கற்பனை, இலிங்கமும் (சிவமும்) பீடமும் (சத்தியும்) ஆக அமையும். இந்த ஒன்பது பேதங்களும் ஒப்பற்ற உமைஒருபாகனின் நடிப்பேயாம்.

உலகம் (பிரபஞ்சம்) இயங்கவென உளங்கொள்ளுங்கால் – சிவமாய், அவ்வியக்கத்துக்கு ஆற்றல் ஆம்பொழுது சத்தியாய், அவ்வாற்றலுக்கு உருவேற்ற உன்னும்வேளை நாதமாய், உருவேற்றும்போது விந்து ஆய், இவ் இயக்கத்துக்குள் எதற்கு, எவர், என்று அமைக்குமிடத்து-சதாசிவமாய், அந்த இயக்கத்தை நெறிப்படுத்தும் நேரம் — மகேசுவரமாய், நெறியிழந்துழித் தண்டித்துச் சீர்செய்யும் அமையம் – உருத்திரனாய்; நெறி நிற்றலைக்காக்கும் ஞான்று - விட்டுணுவாய்; காத்தற் குரியவற்றை ஆக்கும் சமயம் – பிரமாவாய். இந்தப் பேராற்றல் இயக்கம் அமைவதைத் தத்துவசாத்திரம் சித்திரிக்கின்றது.

சிவலிங்கம் — ஞானசத்தி-பரவெளியைச் சிந்தை பண்ணவைக்கும் பான்மையது. பராசத்தி இந்தப் பரவெளி அசைவைக் குறிக்கும் கற்பனை. இலிங்கத்தில் எப்பாங்கிலும் இயைந்திருக்கும் பேராற்றல் ஆன்மாக்கள் கட்டுண்டிருப்பதற்காகவும், ஆவுடையாள் இலிங்கத்தின்கீழ் நோக்கை உணர்த்துவதாகவும் கற்பனை. ஆவுடையாளின் ஓர் மருங்கில் நீண்டுருவாகும் கோமுகி, உயிர்கள் உய்வதற்கு உமாபதியை உன்னுதற்காம் கற்பனை.

இவ்வாறாயில், இறை – ஆற்றல்; சிவம் – சத்தி என்ற தன்மையையும் இலிங்கத்தின் தோற்றத்தையும் கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தியாங்கு சுருக்கி அறிந்தோம்– இனிச் சிவமூர்த்தங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

## சிவமூர்த்தங்கள்

சைவ சாத்திர நூல்கள், சிவமூர்த்தங்கள், விநாயகர், வீரபத்திரர், வைரவர், வேள் என நான்காய் எடுத்தாள் கின்றன. அருள் மூர்த்தங்களாம் இவை எழுந்தவாறெதோ வெனின், இறைவன் உயிர்களுக்குத் திருவருள் பாலிக்க எடுத்துக்கொண்ட திருவுருவங்களே இவை எனலாம்.

அடியார்கள் ஆரா அன்பினால், அப்பனென்று சிவனை யும், அம்மையெனச் சிவசத்தியையும் அழைத்தானந்த முறுவர். அப்பர் அடிகள் 'அப்பன் நீ அம்மை நீ' என்றனர். 'அம்மையே அப்பா' எனச் செம்மை நோக்கிச் சிவசத்தியை முன் வைத்தனர். இரண்டும் அறக்கலந்த திருவாதவூரடிகள், 'தாயு நீயே தந்தை நீயே சங்கரனே' என்பது, ஆய சிவ ஞானப்பால் அம்மை ஊட்ட, அப்பன் பரிவுடன் பார்க்கப் பரவசமுற்ற, திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் திருமொழி யாம். ''தந்தை தாயுலகுக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்கும் பந்தமாயின பெருமான்'' என்று தம்பிரான் தோழனும் நம்பிஆரூரன், நயந்த தோத்திரம் ஆகப் போற்றினர். அவ்வாறே சிவமூர்த்தங்களையும், (ஈசன் மைந் தர்: கணபதி, உமைமகன் – வீரபத்திரர், கங்கை மைந்தன் கந்தன்; பிள்ளை – வைரவர்:) திருக்குமாரர் என்று செல்ல மாகச் சொல்லுவர், சொல்லித் துதிப்பர். அடியார்கள்

பிரபஞ்சத்தின் (உலகின்) இயற்கைப் பெருமை இருந்த படியே!

**அவன் அவ்ள் அதுஎனும் அவை மூவினைமையில்**
**தோன்றிய திதியே ஒடுங்கிமலத் (து) உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

—சிவஞானபோதம் 1ம் சூத்திரம்

ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று சுட்டிக்காட்டப் படும் பிரபஞ்சத்தில் அந்தமே ஆதியாகும் விந்தையே விந்தை- விஞ்ஞான விந்தை! மூன்று தொழில் - தோற்றம், தேற்றம், கூற்றம் - உண்டாகி, உளதாகி, ஒடுங்கிப் பின் அவ்வாறே ஓயாதுறும்.

ஆகவே உலகத்துக்கு அந்தமாய்க் கூற்றாக அழித்தற்றொழில் ஆக்குபவரே மீண்டும் ஆக்கத்தொழில் நோக்கும் இறையாம்.

இத்தன்மைத்தான உத்தமனை, உத்தமன் உத்தமி என வகுத்து ஆன்மாக்கள் வணங்குகின்றன, அவ்வாறு வணங்குவது முற்றறிவைப் பற்றியுணர்ந்த மூதறிஞராம் குரவருக்கே அமையும்.

சந்தானாசாரியர் — மெய்கண்டார், உமாபதிசிவம், அருணந்தி, மறைஞானசம்பந்தர்: சமயாசாரியர் — அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கர்: முன்செய் புண்ணிய முதலீட்டின் நன்மையால் மூலப்பொருளைப் போற்றியவண்ணம் முதல்வனடி சார்ந்தனர்.

அந்த எல்லையை அடையாத அன்பர்கள் மூலத்தின் வடிவமாம் மூர்த்தங்களை முன்வைத்து வணங்கும் வழமையை வகுத்தனர்.

சிவாலயம், சிவசத்தி ஆலயம், விநாயகர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், வைரவர் ஆலயம், வேற்கிறை ஆலயம் என்று, திருக்கோயில்கள் இந்த நெறியை விளக்குகின்றன

அடியார்கள் சிவமூர்த்தங்களை அன்பின் ஆநந்த மேலீட்டினாலே இருக்குமாரர்கள் என்று உருவகப்படுத்தி உள்ளக் கிழியில் உருவெழுதியும் தெள்ளத் தெளிவாக ஆன்மா இலயிக்கும் அமைப்பாக ஆலயம் அமைத்தும் வழிபடல் ஆயினர், விநாயகனைப் பிள்ளையார் என்றும் வேற்கிறையை வேலைக் கையில் உடைய பிள்ளையார் என்றும் விரும்பிய வண்ணம் விண்ணப்பித்து வாழ்த்துவர், வணங்குவர்.

மூத்தோன் என்று மூஷிகவாகனனையும், இளையோன் என்று குமரனையும் பண்பாகப் பரிநாமம் சூட்டுவர்; ஆனை முகன் என்றும் ஆறுமுகன் என்றும் அணிநாமம் அமைப்பர். ஆறுற் காண்பவன் சிவனே. அவனே அம்மூர்த்தங்கள்

சிவன், உலகருபியாய் நிற்றல் – விசுவரூபி
உலகினுக்கப்பால் நிற்றல் – விசுவாதிகன்
உலகம் தோன்றி ஒடுங்க நிற்றல் – விசுவகாரணர்
உலகத்துக்கு உயிராய் நிற்றல் – விசுவாந்தர்யாமி

என்று தத்துவ சாத்திரம் விரித்துரைக்கும்.

ஆன்மா, சிவனருளால், உலகத்தைத் தத்துவ வடிவிற் காண்பதனை உமாபதி சிவாசாரியர் உண்மைநெறி விளக்கத்தில் முன்னாக எடுத்தாண்டிருக்கின்றனர்

மண்முதற் சிவம தீறாய்
வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவம தீறாய்
மலஞ்சட மென்றல் காட்சி
மண்முதற் சிவம தீறாய்
வகையதிற் றானி லாது
கண்ணுதல் அருளால் நீங்கல்
சுத்தியாய்க் கருத லாமே

பிருதி தத்துவம் முதல் நாததத்துவம் முடிவாக உள்ளதையே பிரபஞ்சம் என்பர்

சிவபேதத்தைக் காண ஆன்மா ஞானமயமாம் நிலையை அடைய வேண்டும். அதற்குப் பல படி அமைப்பு உண்டு. சரியை, கிரியை, யோகம், ஞானம் என. இந்தச் சரியை கிரியை முறைகளில் வந்தனவே இறைவன் கோயில்கள்

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே

சிவஞானபோதம் - பன்னிரண்டாம் சூத்திரம். திருக்கோயிற் சிறப்பினை இது சிந்திக்கவைக்கின்றது. சிவநேயச் செல்வர்களின் சீரையும் ஒப்பத் திகழ்த்துகின்றது. சிவன் கழல் ஏத்துஞ் செல்வம் செல்வமே - திருஞானசம்பந்தர் சுலோகப.

சிவனடியார் திருக்கூட்டம் ஆவது சிந்தியின்

## பழம்பதிப் பிள்ளையார்

இந்த அயரா அன்பில் அமைந்த ஆலயம் மல்லைப் பழம்பதியில் ஓங்கும் பழங்கோயில்; பழம்பிள்ளையார் இடமாகவும், இளங்குமரன் வலமாகவும் ஆகத்திகழ்வது இப் பழம்பதி.

எல்லாமாய் எங்குமாய்இன்ப எழிலாய்இயங்குமிறை
சொல்லாரும் தும்பிக்கைத் தூயோன் பிரணவத்
தோற்றமதில்
மல்லாக மாநகர் வைகி வளமருள் மன்பதிதான்
பல்லாண் டியல்புதுப் பண்பார் பழங்கோயில்
பாரினிலே

இங்கு எழுந்தருளி இருக்கும் ஏரம்பனை ஏத்தி இயம்பியபடி அடியார் ஆரா அன்பினில் ஆற்றுமையில், வேண்டுகின்றார்

வரந்தாராய் மல்லை வளம்பெருக்கும் மன்னு
பரந்தாளும் முன்னைப் பழைய பெருந்தேவா
நித்தியமும் நின்கோயில் நேராய் நினைந்துதொழ
உத்தமனே உள்ளத் துணர்த்து

தொழுது திருநீறும் சொல்மணியும் சூழ
அழுதுன் அருட்கோயில் அன்பால் மெழுக
அறிவும் அமைவும் அணிமல்லைப் பிள்ளாய்
செறிவுறச் செய்வாய் தெரித்து

ஈசனே மல்லையில் ஏரம்பா ஈழமெனும்
தேசமதிற் செந்தமிழ்ச் சீரோங்கப் — பேசரிய
சைவநெறிச் சால்புயரச் சற்சனர் சங்கமுறத்
தெய்வமே சித்தி திகழ்ந்து

பழம்பதி என்ற புனைநாமம் புகுந்த வரலாற்றைப் புகட்டி அடியார் கூறுகின்றார்,

பொல்லாத புன்னெறிப் போர்த்துக்கற் போர்வீரர்
மல்லாக மாதலத்தில் மாலுறச்செய்-தொல்லோனே
எல்லாளா ஏரம்பா ஐயா பழம்பிள்ளாய்
நல்லாராய் வாழ நடத்து

இத்தகைய உத்தம தலத்தில் ஈசன், பிள்ளையார் மூர்த்தமாய், ஆறுமுகமூர்த்தமாய் எம்மை எல்லாம் வாழவைக்கின்றாரே. என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று ஒவ்வொரு அடியாரும் உள்ளத்தில் உணர்வதே இங்கு சைவ நெறிச் சால்புத்தலைமை சாலவும் உண்டென்பதைக் காட்டும்;

சிவனுக்கும் விநாயகருக்கும் பேதம் உண்டா, அன்றி ஆறுமுகப் பெருமானுக்கும் ஏதும் பேதம் உண்டா; எப்படி இருக்கும்? வீரபத்திரர், வைரவர், மூர்த்தங்களுக்கும் இவ்வாறே பரம்பொருட் பொலிவுண்டாம்.

ஒவ்வோர் காலத்தில் ஆணவம் மேலோங்கி அசுரர்கள் சுரர்களைத் துன்புறுத்தி வந்ததுண்டு. அவ்வேளைகளில் அரன் திருவருள் மூர்த்தங்களாக எழுந்தனர்— விநாயகர் வேலவர், வீரபத்திரர், வைரவர்—இந்த நிகழ்ச்சிகள் சைவ சமயப் புராணங்ககளிற் புலவர்களாலே புலமைக்கியைந்த மொழிப்புடன் பொலிவாகக் கூறப்பட்டுள்ளன.

கஜமுகன் என்றவோர் கயமையாளன் கண்ணை மறைக்கும் காரிருள் ஆணவத்தாற் பீடிக்கப்பட்டுச் சொல்லொணாத் துயரத்தை அசுரருக்கும் ஏனையோருக்கும் விளைவித்து வந்தனன் இறுமாப்புடனே. அந்தக் கயமுகனை அடக்கக் கங்கைவேணியன் எடுத்த திருமூர்த்தமே விநாயகவடிவம்,

ஆணவம் ஒருவரைப் பற்றினல் அங்கு இருள் குடிகொண்டு விடும். ஒளி இருக்கமாட்டாது. இறை ஒளியைக் கண்டால் அன்றி இந்த இருள் இடம் பெயராது?

ஒருபொருளும் காட்டா திருளுருவம் காட்டும்
இருபொருளுங் காட்டா திது - (ஆணவம்)

—திருவருட்பயன்

இவ்வாறே இன்னெரு அசுரன் சூரன் என்போன் ஆணவ இருள் பீடிக்கப்பட்டு அதனுல் எழுந்த மூடத்தனத்தினுல், முழு அதிகாரமும் கொண்ட மூவுலக அரசனுக எண்ணி, அவ்வெறி மயக்கால் அமரர்களுக்கு ஆகாத் தீமைகள் புரிந்த வேளையிலே தான், சிவப்பரம் பொருளின் நெற்றிக் கண் சிவப்பொறி, செழுமைச் சரவணப் பொய்கையில் மூர்த்தம் ஆறும் மூவிரு முகங்களாய்ப் பன்னிரு கரங்களுடன் ஒருங்கு கந்தாகிக் கந்தக் கடவுளாய்க் கலியுக வரதனுய்க் காட்சி கொடுத்தது. ஆணவ வீரன் சூரனே, அழிந்தும், இறை அருள் பொழிந்ததும் மஞ்ஞையாய்ச் சிவசண்முக ஊர்த்தியாய் வணங்க முடிந்ததென்றுல், அருள் மூர்த்தங்கள் அன்பு உருவங்கள் அன்றோ.

## விநாயகத் திருவடிவம்

திருவருளே பிள்ளையார் திருமேனி - இத்திருமேனி ஆன்மாக்கள் அப்பெருமானுக்குப் பூசை இயற்றுதற்கென ஒரு தியான அமைப்பு. ஔவைப்பிராட்டியார் அருச்சிக்கும் பொழுது இத்திருமேனி எழிலை அழகுற எடுத்துரைத்து:

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தில் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

என்று அடைக்கலம் புகுந்தனர்.

தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட என்ற சொற்றொடரின் சுவையென்ன, சூழும் கருத்தென்ன! ஔவைப் பிராட்டிக்கு இவ்விதம் இருந்தது ஓங்காரத்துட்பொருளின் தத்துவத் தோற்றம்

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறு

அத்திருவுருவம் முப்பழம் நுகரும் மூஷிக வாகனத்திலே அருட்காட்சி அளிக்கின்றது. கோடாயுதம் கொடுவினைகளையக் கொண்டதிந்தத் திருமேனி அல்லவா?

சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிக்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி

நின்றதிந்த அருட்டிரு மேனியென்றால், அது சிவமூர்த்தம் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுங்கொல்!

ஒற்றைக் கொம்பினால் நாம் உணர்வது ஆணவ சொருபமும், கயமுகனைத் தடிந்த ஒற்றைக் கொம்பு எம்மைப் பீடித்திருக்கும் மும்மலத் தாக்கத்தை நீக்க உதவுவதும் என்பதே.

பாசமும் அங்குசமும் ஆன்மாவைச் சூழ்ந்திருக்கும் பாசமாம் ஆணவயானையைக் கட்டி அடக்குதற்காம்; ஐந்தொழில் ஆற்றுவதற்கு ஐங்கரங்கள் அமைந்துள்ளன. மூன்று பேரொளியாம் செங்கதிரோனும், திங்களும், தீயும்

பிரண்வ சொருபனுக்கு முக்கண்கள் போல் அமையும், சிவனுக்கும் திரயம்பகம் திகழ்வது போன்று. பரந்த இரு செவிகளும், பரந்த ஞானத்தையும், ஆற்றலையும் குறிப்பன வாயுள.

பேழைவயிறு, பிரபஞ்சம் முழுவதையும் உள் அடக்கிப் பெருமை பெறுவதனால் ஆம் என்பர்.

வித்தக விநாயக விரைகழல் சரணே என ஆன்மாக் களின் புகலிடமாகத் திருவடி இரண்டும் விளங்கும்; ஞான சத்தி, கிரியாசத்தி எனும் இரு ஆற்றல்களும் இங்கே துலங்கும்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்ற சேக்கிழார் செந்தமிழ் ஈண்டுச் சிந்திக்கற் பாலது.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ யோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே
—திருமந்திரம்

'செறிதுணையாவ சிவனடிச் சிந்தை' —திருமூலர் யாவும் திருவடியில் அமையும் என்ற அருங்கருத்தினைத் திருமுறைகள் நன்கு தெளிவாக்குகின்றன.

திருச்சிற்றம்பலம்

ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும் ஆவன விண்ணும்
மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பண
தாமதியோ (டு)
ஆதியும் அந்தமும் ஆனஐ யாறன் அடித்தலமே.

திருச்சிற்றம்பலம்

உ

# துதிக்கை மூர்த்திக்குத் துதிநெறி

பெயர் ஒன்றில்லாத பெருமானுக்குப் பேசரிய பெயர்கள் சூட்டிப் பிரேமையினால் அடியார்கள் வணங்குவர். உருவம் இலி, ஒரு நாமம் இலி என்றிருந்தும், உருவமும் உவப்பான நாமமும் அமைத்துப் போற்றுதல் ஆன்றோர் நெறி.

நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு, இலட்சம் நாமங்களால் அர்ச்சனை செய்தல் அடியார்களின் அயரா அன்பின் மேலீட்டினால். அப்பொழுதெல்லாம் ஓம் என்ற பிரணவ ஒலியுடன் இட்டமாய் இடப்படும் நாமங்களுடன் நம என வணக்கச் சொல்லுடன், மந்திரம் வேதசிவாகம வித்தகர்களால் அமைக்கப்பட்டு வழிபாட்டு முறையில் வழமை பழமையாய் விட்டது.

ஐந்து கரத்தனை, ஐம்முக மூர்த்தியாக அமைத்து அர்ச்சிக்கும்பொழுது ஐம் பூதங்களின் கூட்டாம் உடம்புடனுய ஈர்ப்பைத் தவிர்த்து ஐம்புலன்களையும் அப்படியே அடக்கி ஐந்தெழுத்தின் அணியாகவும் ஐந் தொழிலின் அதிபதியாகவும் உள்ள ஐமுகக் கஜேந்திர வதனனை வந்தனை செய்கின்றோம்.

## ஐமுக அர்ச்சனை

எட்டு அங்கம் மூன்று தானம் ஐந்து தேவதை இவற்றின் தொகுப்பாம் பிரணவத்தை முன்வைத்தே ஐங்கரனுக்கு ஐம்முகங்களை அமைக்கின்றோம். இந்த 8 + 3 + 5 = 16 கூட்டு எண்ணைக் குறிக்குமுகமாகப் பதினாறு பண்பு நாமங்கள் பத்த வித்தகர்களாற் சூட்டப்பட்டிருக்கின்றன.

ஓம் கஜமுகாயநம: திருவருளாம் செஞ்சுக வதனருக்கு வணக்கம்

ஓம் ஏகதந்தாய நம: பதிஒன்றே என்று உணர்த்தும் ஒற்றைக்கொம்பனுக்கு வணக்கம்

ஓம் கபிலாய நம! கருமையுடன் கவின்செயும் பொன் வண்ணமும் ஒருங்கே பொலிந்து பிடியதன் உரு உமை கொள மிகு கரியது வடிகொடு என்ற பேற்றுக்கு வணக்கம்

ஓம் கஜகர்ணிகாயநம: தெய்வீக யானைச்செவிகளின் அசைவு ஆன்மாக்களின் அல்லலை அப்புறப் படுத்தும் பாங்மையிலுள்ள ஆனை முகத்தண்ணலுக்கு வணக்கம்

ஓம் இலம்போதராய நம: தளர்ச்சியான பெருவயிற்றுப் பிள்ளையாருக்கு வணக்கம்

ஓம் விகடாய நம! விகடக் கூத்தை விரும்பும் விநாயகருக்கு வணக்கம்

ஓம் விக்கினராசஜாயநம: அடியார் அல்லல் அகற்றும் ஐங்கரனுக்கு வணக்கம்

ஓம் கணாதிபதயே நம: சிவகணங்களின் சிறப்புத் தலைவனும் கணபதிக்கு வணக்கம்.

ஓம் தூமகேதவே நம: தூபந் துலங்கு கொடியுடைய அக்கினி சொரூப சிவ மூர்த்தத்துக்கு வணக்கம்.

ஓம் கணாத்யக்ஷாய நம: சிவகணச் சேனாதிபதியாம் கணேசருக்கு வணக்கம்.

ஓம் பாலச்சந்த்ராய நம: நெற்றியில் இளம்பிறை நெறியுடைய நுதற் கண் மூர்த்தியின் மூர்த்தமே வணக்கம்.

ஓம் கஜாநநாய நம: ஓங்காரமே உருவமான களிற்றுமுகக் கடவுளே வணக்கம்.

ஓம் வக்ரதுண்டாய நம: வளைந்து விளங்கும் துதிக்கைத் தும்பி முகற்கு வணக்கம்.

ஓம் சூர்ப்பகர்ணாய நம: சுளகு அளவு செறிந்த செவிகள் திகழும் தெய்வமே வணக்கம்.

ஓம் ஹேரம்பாய நம: அழகே அணியாக அமைந்த ஐங்கரனே வணக்கம்.

ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம: கந்தமூர்த்தம் உகந்த கடவுளே வணக்கம்.

(பழம் பதியிலே திருமுருகனுடன் தரிசனம் தருகின்றார் ஒரு கொம்புடைய ஓங்காரக் கடவுள்)

உ

# வழிபாட்டின் வழமை

## குட்டிக் கும்பிடல்

அடலரு ணைத்திருக் கோபுரத் தேய்ந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்றுகண்டு கொண்டேன் வருவார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன்

என்று அலங்காரம் பாடி அருணகிரியார் இந்தக் குட்டுக் கும்பிடலை என்ன அழகாக எடுத்தமைத்தார்.

ஐந்து கரங்களை ஐந்து எழுத்துக்களை நினைந்து போலும் ஐந்து தரம் குட்டுதல் வழமையானது. சிரசிற் குட்டும்பொழுது அமுதத்தைை ஆறுதார வழியாக இறங்க வைக்கும் என்பர் யோகியர்.

## தோப்புக் கரணம் போடுதல்

செவிகளைக் கரங்களால் மாறிப் பற்றிக் கொண்டு குந்தியெழுந்து கும்பிடல்

அரசன் அவையில் அணுகும் பொழுது அவயவங்களை நாம் அடக்கி ஒடுக்கி எங்களுக்கு மேலாகவுள்ள அதிகாரத்தை உணர்ந்திருக்கின்ற வகையில் நடந்து கொள்கின்றோம். அரசர்க்கரசன் அண்டாதிபதிகளுக்கு அரசன் யாவற்றுக்கும் அரசன் ஆகும் இறைவன் முன்னிலையில் எவ்வளவு அடக்க ஒடுக்கம் வேண்டும் என்பதைக் குறிக்கும் எங்கள் வழிபாட்டு முறை இது.

## அர்ப்பணம்

விரதம், நோன்பு, யாகம் என்பன ஆன்ம அர்ப்பணத்துக்குரிய வழிகள்

பிள்ளையார் பெருமானுக்கு விசேடமான விரதங்கள் இவையென அடியார்களே அமைத்து விட்டனர் – சான்றுகப் புராணங்கள் உண்டு

விநாயக சதுர்த்தி, விநாயகசட்டி விசேடமானவை. விரதம் அநுட்டிப்பதற்கென விதிகள் பலவுள: விரதம் என்றால் மேலான நியமம்

கார்த்திகைத் திங்கள் இறங்குபக்க முதலாந் திதி முதலாக மார்கழித் திங்கள் ஏறுபக்க ஆறுந்திதி ஈறாக இருபத்தொரு நாட்கள் நோன்பு விநாயகப் பெருவிரதம் ஆகும். இப்புனித காலத்திலே விநாயக புராணம் படிப்பது கேட்பது வழமை. பிள்ளையார் பெருங்கதை வாசிப்பதும் வழக்கமாய் விட்டது. எனினும் ஐம்புலனொடுக்கி ஐங்கரனையே நோக்கி நோன்பிருக்கும் பொழுது கதை படிப்பதிலும் பார்க்க ஓங்காரத்திருநாமம் உச்சரித்தல், தோத்திர மந்திரங்களைச் சொல்லியபடி நன்மலர் அமைத்தல், ஔவையார் அகவல் பாராயணம் செய்தல், சிற்றில் திருமுறை ஓதுதல் மிகச் சிறந்த வழியாகும்

வித்தக விநாயகரின் விரைகழல் ஐம்முகனும் நித்தனின் விரைகழலே. ஞானத்தின் திருவுருவாகத் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை சேக்கிழார் சுவாமிகள் கண் நோக்கம் செய்யும் பொழுது பிள்ளையார் மூர்த்தத்தைச் சிந்தை கொண்டனர் போலும்; திருப்பெருவடிவமும் இதுவே.

## ஓங்கார உருவம்

ஓம், நம, என்பன மந்திரங்களின் உயிர் நாடிகளாம் சொற்கள் – மனத்தில் வகுத்து வழிபட எழுந்ததை மந்திரம் என்பர்.

மனனாத் த்ராவதே! உத்தம ஞானச்சால்பு உள்ளவர் தம் உளத்திலே உருவாகின்ற வணக்க எண்ணங்கள் மந்திர வடிவாகின்றன. ஒருவனும் சிவப்பரமனின் ஒலி வடிவமே ஓங்காரம், இந்த உருவத்தை யாம் சிந்தை செய்ய வந்த வடிவம் யானை;

'உ' என்ற பிள்ளையார் சுழி இந்த உருவத்தின் பொழிப்பாகும்.

அ. உ. ம; வியட்டி (ஓம்): சமட்டி, பிரானிடம் எல்லாப் பிராணன்களையும் பேணி வைப்பது பிரணவம். யாவும் இவற்றுள் அடங்கும். எனவே சிவனே விநாயகன்; பராத்மா ஒன்று, பரந்த திருமேனிகள் பலவாம்.
'ஏகப் பராத்மா பகுதேக வர்த்தி'

மகேசுபரன். உமை, விநாயகன், கந்தன்யாவரும் சிவனே.
யக்ஷமகேச்வர, யக்ஷசோமா; யக்ஷவிநாயக, யக்ஷஸ்கதே.

பிரணவத் திருமூர்த்தம் – பிள்ளையார் சுழியினுற் விரித்துக் காட்டப்படுவது; புத்தி சித்தியைப் புகட்டுவது;

சென்ற நிகழ்கின்ற வரும் காலமெல்லாம் உணர்த்துவது. காலாதீதத்தைக் காட்டுவதும் அதே.

அ, (இருக்கு) உ. (யசுர்) ம (சாம) துரிய ஓங்காரம்

(அதர்வண) வேதங்களைக் குறிக்கின்றன

தாரக மந்திரம் இதுவே: பிறவி பெருங்கடல் நீந்தப் பேருதவியாகும் புணையும் இதுவே.

அ சினத்தை, உ, வெகுளியை, ம், பயத்தை அடக்கவே; ஓம், அகங்காரத்தை அப்படியே அடக்கும்

நாதவிந்து கலாதி நமோநம - பின்னோயார், அறி. உ, விந்துநாத விசேடம் உணர்த்தும் உருவமாம்

ஓயாதே ஓமென் றொலியை உயர்த்திரா
மாயாது போமோ மலத்திரை வாயோத

உள்ளத்தை ஊக்கி ஒலிபரப்பி உண்மைநெறி
தெள்ளத் தெளிவாக்கும் தெரிந்து

ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே
—திருமந்திரம்

நோன்பிருக்கும் புண்ணியப்பொழுதில் அடியார்கள் நோக்கம் முற்றிலும் இறைவன்பால் இருக்க வேண்டும். அதற்குத் திருமுறைப் பாராயணம் அருட் பொருத்தமானது. தேவார திருவாசகம் ஒதும்பொழுதும் 'வாழ்க' 'போற்றி', 'நம' என்று வரும் பதிகங்களைப் பாராயணஞ் செய்தல் சீராகும். நமச்சிவாயப் பதிகம், திருத்தும் பதிகம் போற்றித் திருவகவல், சிவபுராணம்

திருவெழு கூற்றிருக்கை, திருவங்கமாலை என்றின்னவை மிக நன்று. ஸ்ரீ கணேச பஞ்சரத்தினம் போன்ற வடமொழிச் சுலோகங்கள் உள. இவற்றுடன் பத்திப் பாடல்களும் பொருத்தமாகும்.

விநாயகர் வழிபாட்டுக்குத் தேங்காய், பால், பழம், வெற்றிலை, தூபம், தீபம், நெய், இளநீர் முதலியன சிறப்பான அர்ச்சனைப் பொருட்கள்: அவ்வாறே, இறைவனின் எம் மூர்த்தத்துக்கு தேங்காய் – நாளிகேரம் – பிள்ளையாருக்குப் பிரத்தியேக வழிபாட்டுப் பொருள் என்பர். அதை எப்படி அடித்தல், உடைத்தல், எறிதல், என்பதற்கு விதிகளும் அறிஞர்கள் இட்டிருக்கின்றனர். இவற்றைக் கடைப் பிடித்தல் உள்ளக் கட்டுப்பாட்டுக்கும் சிந்தனையை வழிப்படுதலுக்கும் பயனாக வரும்.

அடியார்களே, அன்பும் அறமும் அமைய, உண்மையும் ஒழுக்கமும் ஒருங்குற, கன்மவினைத் தாக்கம் கலைந்து விலக, சென்மவிறுதி செவ்விதாக, இம்மையில் தேட்டம் மறுமைக்கும் உரமாக, அம்மை அப்பனும் அரனின் திருவுருவங்களைத் தியானித்துத் திருநாமஞ் செப்பித் திருக்கோயிற்றொண்டும் சேவையும் வணக்கமும் செய்து கொலை களவு கள் காமம் குருநிந்தையாம் மாபாதகம் எண்ணத்திலும் எழாமல் பொய் வழியிலும் புகலாமல் குரு பிதா மாதா என்ற வழிகாட்டிகளையும் வணங்கி, நல்லன இயற்றி அல்லன அகற்றி, வாழ்வாங்கு வாழ்வோமாக - நல்லவண்ணம் வாழலாம் என்று நாயன்மார்கள் வழிசொல்லியிருக்கின்றனர்.

ஒற்றைக்கை ஐந்துகரா ஓம் ஓம் ஓம்
ஓங்காரத் துட்பொருளே ஓம் ஓம் ஓம்
முற்றறிவே மூன்றேனே ஓம் ஓம் ஓம்
மூஷிகத்து வாகனனே ஓம் ஓம் ஓம்
கற்றறியக் கணபதியே ஓம் ஓம் ஓம்
கண்ணுதலான் கண்மணியே ஓம் ஓம் ஓம்
பற்றுபவர்க் குற்றவரே ஓம் ஓம் ஓம்
பழங்கோயிற் பிள்ளையரே ஓம் ஓம் ஓம்

# ஸ்ரீ பழம்பிள்ளையார் தோத்திரம்

அருட்கவி சி, விநாசித்தம்பி அவர்கள் அர்ப்பணம்

பேர்பூத்த பிரணவத்தின் பிரானே போற்றி
பிறைபூத்த சடேசனருள் மகனே போற்றி
நீர்பூத்த காவிரியைத் தந்தாய் போற்றி
நிலம்பூத்த கோகர்ணம் அமைத்தாய் போற்றி
பார்பூத்த நாரையூர்ப் பரனே போற்றி
பயன்பூத்த பாரதத்தை வரைந்தாய் போற்றி
சீர்பூத்த மல்லாகப் பதிய மர்ந்த
சிவப்பழம் பிள்ளையாரே போற்றி போற்றி.

கருவளரும் உயிர்காக்கும் கணேசா போற்றி
கலைவளரும் திருமுறைக்கோர் முதலே போற்றி
தருவளரும் கணபதீச் சுரத்தாய் போற்றி
தவம்வ்ளரும் சகஸ்ராரத் தலைவா போற்றி
உருவளரும் உள்ளத்தின் ஒளியே போற்றி
உரைவளரும் நாவிற்கோர் ஒலியே போற்றி
திருவளரும் மல்லாகப் பதிய மர்ந்த
சிவப்பழம் பிள்ளையாரே போற்றி போற்றி.

நான்பொலிந்த கஜாசுரனை நலித்தாய் போற்றி
நலம்பொலிந்த வல்லபையின் நாதா போற்றி
மான்பொலிந்த பரமண்தேர் இறுத்தாய் போற்றி
வலம்பொலிந்த கனிவாங்கி நின்றாய் போற்றி
வான்பொலிந்த குகன்வதுவைக் குருவே போற்றி
வளம்பொலிந்த தமிழ்ஔவைக் கினியாய் போற்றி
தேன்பொலிந்த மல்லாகப் பதிய மர்ந்த
சிவப்பழம் பிள்ளையாரே போற்றி போற்றி.

சைவப்பிரகாச அச்சகம்,
யாழ்ப்பாணம்.